**பிப்ரவரி – 18**

# TNPSC துளிகள்


- இந்தியாவானது, சிங்கப்பூர் மற்றும் ஓமன் போன்ற அதன் இந்தியப் பெருங்கடல் பங்கு தாரர் நாடுகளுடன் இணைந்து ஓமன் நாட்டின் தலைநகரான மஸ்கட்டில் எட்டாவது இந்தியப் பெருங்கடல் மாநாட்டினை (IOC) நடத்துகின்றது.
- அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், யுனெஸ்கோ அமைப்பானது, "Imagine a world with more women in science" என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- மத்தியப் பிரதேச அரசானது, பன்னாட்டு நிறுவனங்களை ஈர்ப்பதற்கும் மத்தியப் பிரதேசத்தினை எண்ணிம மற்றும் தொழில்நுட்ப மையமாக நிறுவுவதற்குமான ஒரு உலகளாவிய திறன் மையக் கொள்கை 2025 என்ற கொள்கையினை வெளியிட்டுள்ளது.
- மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் (CCPA) ஆனது, கைபேசிகளின் இயங்கு தள (OS) அடிப்படையில் நுகர்வோரிடமிருந்து வெவ்வேறு கட்டணங்களை வசூலித்ததாகக் கூறப்படும் நிலையில் அது ஓலா மற்றும் ஊபர் நிறுவனங்களுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளது.
- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியமானது, செயலற்ற அல்லது உரிமை கோரப்படாத பரஸ்பர நிதியக் குறியீடுகளைக் கண்காணிப்பதற்கும், அவற்றை மீட்டு எடுப்பதற்கும் என முதலீட்டாளர்களுக்கு உதவுவதற்காக வேண்டி MITRA எனும் புதிய எண்ணிமத் தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மீன் வளத் துறை அமைச்சகமானது PMMKSSY (Pradhan Mantri Matsya Kisan Samridhi Sah-Yojana) என்ற ஒரு திட்டத்தின் கீழ் ஏராளமான பலன்களைப் பெறத் தகுதியுள்ள பங்கு தாரர்களை ஊக்குவிப்பதற்காக என்று, தேசிய மீன்வள எண்ணிமத் தளத்தில் (NFDP) பதிவு செய்வதற்கான தேசிய அளவிலான சிறப்புப் பிரச்சாரத்தினை ஏற்பாடு செய்து வருகிறது.
- ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியர் நலத் துறையானது, 16 துறைகள்/அமைச்சகங்களில் 120 நாட்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள நீண்டகால ஓய்வூதிய வழக்குகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துவதற்காக 12வது நாடு தழுவிய ஓய்வூதிய மன்றத்தினை நடத்தியது.
- தேசிய அனல் மின் கழக நிறுவனமானது (NTPC), இடர்களை எதிர்கொள்வதற்கான நீர் வளத்தின் நெகிழ்திறன் பிரிவில் மிக மதிப்புமிக்க 2025 ஆம் ஆண்டிற்கான நிலைத் தன்மையை நோக்கிய விரைவான முன்னேற்றத்திற்கான விருதைப் பெற்றுள்ளது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், பெங்களூருவில் The Art of Living அறக்கட்டளை மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேசப் பெண்கள் மாநாட்டின் தொடக்க அமர்வில் கலந்து கொண்டார்.

# தேசியச் செய்திகள்

## உயர் மட்ட நீதித்துறையின் நியமனங்களில் இடஒதுக்கீடு

- திமுக மாநிலங்களவை உறுப்பினர் P. வில்சன் ஒரு தனிநபர் மசோதாவை அறிமுகப் படுத்தியுள்ளதையடுத்து உயர் மட்ட நீதித்துறையின் நியமனங்களில் இடஒதுக்கீடு குறித்த விவாதத்தினை மீண்டும் எழுப்பியுள்ளது.
- உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் நியமனத்தில் SC/ST மற்றும் OBC பிரிவினருக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று அந்த மசோதா கோருகிறது.

- உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அல்லது அங்கு எந்தவொரு நீதிபதியையும் நியமிக்கும் போது, அந்தந்த மாநில அரசுகளுடன் இந்திய அரசு கலந்தாலோசிக்கப் பட வேண்டும் என்றும் அது கோரியது.
- மானியங்களுக்கான கோரிக்கை குறித்த 84வது அறிக்கையில், பெண் நீதிபதிகளின் எண்ணிக்கை ஆனது மொத்தமுள்ள நீதிபதிகளின் எண்ணிக்கையில் 50% ஆக இருக்க வேண்டும் என்று குழு பரிந்துரைத்திருந்தது.
- அரசியலமைப்பின் 124 மற்றும் 217வது சரத்துகளில் திருத்தம் செய்வதற்கான எந்தத் திட்டமும் இல்லை என்று சட்ட அமைச்சகம் அப்போது கூறியிருந்தது.
- 2018 ஆம் ஆண்டு முதல் பல்வேறு உயர்நீதிமன்றங்களுக்கு நியமிக்கப்பட்ட சுமார் 604 நீதிபதிகளில் 454 பேர் பொதுப் பிரிவைச் சேர்ந்தவர்கள்.
- அதில் 18 பேர் மட்டுமே பட்டியலிடப்பட்ட சாதியினர் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர் என்ற நிலையில் அதில் ஒன்பது பேர் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பிரிவைச் சேர்ந்தவர்கள், 72 பேர் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்கள், 34 பேர் சிறுபான்மைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.




## 50 எதிர்கால நுட்பம் சார் திறன் மையங்கள்




- தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC) ஆனது 50 புதிய எதிர்கால நுட்பம் சார் திறன் மையங்கள் (FSCs) மற்றும் 10 NSDC சர்வதேச பயிற்றுக் கழகங்களை அமைக்க உள்ளது

என்று அறிவித்துள்ளது.

- வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்துறை தேவைகளுடன் கல்வியை நன்கு இணைப்பதன் மூலம் கோட்பாடு சார் அறிவுக்கும் நடைமுறை திறன்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதுவரை சுமார் 33 உலகளாவிய நிறுவனங்கள் இதில் இணைந்துள்ளன என்பதோடு மேலும் உயர் கல்வி நிறுவனங்களில் (HEIs) 21 எதிர்கால நுட்பம் சார் திறன் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## ஆழ்கடலில் அமைந்த முதல் ஆய்வு நிலையம்





- சீனாவானது கடல்சார் ஆய்வுகளை பரிமாற்றி அமைக்கக் கூடிய வகையில் ஆழ்கடல் ஆராய்ச்சிக் கட்டமைப்பிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- "ஆழ்கடல் வாயு வெளியேற்ற விரிசல்" என்ற சூழல் அமைப்பு ஆராய்ச்சி மையமானது, உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த தென் சீனக் கடலின் மேற்பரப்பிலிருந்து சுமார் 2000 மீட்டர்கள் (6560 அடி) கீழே நிறுவப்பட உள்ளது.
- இந்த மையமானது மிகவும் தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப் பட்ட ஒரு அறிவியல் சார்ந்த கடலடி மையங்களில் ஒன்றாக இருக்கும்.
- அமெரிக்கா மற்றும் சோவியத் ஒன்றியம் ஆகியவற்றிகு அடுத்தபடியாக ஆழ்கடல் ஆய்வு நிலையத்தினை உருவாக்கி இயக்கும் உலகின் மூன்றாவது நாடாக சீனா மாற உள்ளது.
- 2008 ஆம் ஆண்டில் செயல்பாட்டில் இருந்து விலகிய ஒரு அமெரிக்க ஆழ்கடல் ஆய்வு நிலையம் ஆன NR - 1 ஆனது அணுசக்தியில் இயங்கிய நீர்மூழ்கிக் கப்பல் ஆகும்.
- அணு உலையின் மூலம் இயக்கப்படும் சோவியத் ஒன்றியத்தின் ஆய்வு நீர் மூழ்கிக் கப்பலான AS-12 லோஷாரிக் 2000 மீட்டர் ஆழம் வரை எட்டியது.
- இது 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு பெருந்தீ விபத்தினால் பாதிக்கப்பட்டதையடுத்து, ரஷ்யாவினால் கை விடப்பட்டது.

## அமெரிக்காவின் டோபின் வரி

- டிரம்பின் நிர்வாகம் ஆனது, மூலதன வரவுகள் மீது பண மதிப்பு சார்ந்த குறுகிய கால

வர்த்தகம் மீதான வரி / டோபின் வரி விதிப்பது குறித்து பரிசீலித்து வருகிறது என்ற ஒரு நிலையில் இது உலகளாவிய நிதிச் சந்தைகளை சீர்குலைக்கும் நடவடிக்கையாகும்.


- உலகச் சந்தையில், பண மதிப்பு சார்ந்தப் பரிவர்த்தனைகளுக்கு 0.0005% வரி விதிப்பது என்ற டோபினின் கருத்தாக்கத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் பெரிய அளவிலான வருவாயை அதிகரிக்கலாம் என்பதோடு மேலும் இது பரிவர்த்தனைகள் அல்லது நிதி பாய்வுகளைக் குறைக்காது.
- டோபின் வரி என்பது குறுகிய கால ஊக வர்த்தகத்தினை தடுப்பதை ஒரு நோக்கமாகக் கொண்ட அந்நியச் செலாவணி பரிவர்த்தனைகள் மீதான வரியாகும்.
- இது நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணரான ஜேம்ஸ் டோபின் என்பவரால் 1972 ஆம் ஆண்டில் பிரெட்டன் வுட்ஸ் உடன்படிக்கை கட்டமைப்பின் வீழ்ச்சிக்குப் பிறகு, பணச் சந்தையின் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ற நடவடிக்கையினை மேற்கொள்ளும் வகையில் முன்மொழியப்பட்டது.
- இந்தியாவின் பங்குகளின் பரிவர்த்தனை மீதான வரி (2004) ஆனது, பங்குச் சந்தை பரிவர்த்தனைகள் மீதான டோபின் வரியாகச் செயல்படுகிறது.




## சூடான் வைரஸ் பெருந்தொற்று

- சமீபத்தில் சூடான் வைரஸ் நோய் பரவி வருவதாக உகாண்டா நாட்டு அரசும், உலக சுகாதார அமைப்பும் உறுதி செய்துள்ளன.
- இது 41% முதல் 100% வரையிலான நோய் பாதிப்புகள் மற்றும் உயிரிழப்புகளைப் பதிவு செய்ததுடன் ஒரு கடுமையான மற்றும் மரணத்தை ஏற்படுத்தக் கூடிய நோயாக இது உள்ளது.
- உகாண்டாவில் இதற்கு முன்னதாக ஏழு பெருந்தொற்றுகள் ஏற்பட்டுள்ளது என்ற ஒரு நிலையில் மிகச் சமீபத்தில் பதிவான பெருந்தொற்று 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்டது ஆகும்.
- உகாண்டாவிலும் ஏற்பட்ட 2022 ஆம் ஆண்டு சூடான் வைரஸ் பெருந்தொற்று ஆனது 164 நோய்ப் பாதிப்புகள் மற்றும் சுமார் 77 உயிரிழப்புகளை (உயிரிழப்பு விகிதம் 47%) ஏற்படுத்தியது.
- சூடான் வைரஸுக்கு எதிராக சிகிச்சைகள் அல்லது தடுப்பூசிகள் எதுவும் இது வரை கண்டுபிடிக்கப் படவில்லை.

- சூடான் மற்றும் எபோலா வைரஸ்கள் ஆகிய இந்த இரண்டும், ஆர்த்தோபொலா என்ற வைரஸ் குடும்பத்தினைச் சேர்ந்தவை என்றாலும், வெவ்வேறு புரதங்கள் மற்றும் சில மரபணு கூறுகளை அவை கொண்டுள்ளன.




# பொருளாதாரச் செய்திகள்

## ESG மதிப்பீடு வழங்குநர்களுக்கான புதிய வழிகாட்டுதல்கள்




- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியமானது, ESG என்ற ஒரு தரவரிசையை வழங்குநர்களுக்கு, மதிப்பீடுகளைத் திரும்பப் பெறுதல், வெளியிடல், தணிக்கைகள் மற்றும் அரசாங்க விதிமுறைகள் தொடர்பான செயல்பாடுகளை கையாளுவதற்காக வலுவான நடவடிக்கைகளை முன்மொழிந்துள்ளது.
- இந்த நடவடிக்கைகள் ஆனது சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) மதிப்பீட்டு செயல்முறையில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

- இந்த சில வழிகாட்டுதல்களானது, ERP நிறுவனங்கள் அந்த முக்கிய மதிப்பீடுகளைத் திரும்பப் பெறுவதற்கான இந்நிபந்தனைகளை மிகவும் நன்கு தெளிவுபடுத்துவதோடு, அவற்றின் மதிப்பீடுகளுக்கான நியாயத் தன்மையினை வெளிப்படுத்துகின்றன.
- இந்த முன்னெடுப்பானது முதலீட்டு முடிவுகளில் ESG காரணிகளின் அதிகரித்து வரும் முக்கியத்துவத்தினைப் பிரதிபலிக்கிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## R-37M எறிகணை

- Su-30MKI விமானத்தின் இறக்கைகளின் கீழ் பொருத்தப்பட்ட R-77 வான்வழி தாக்குதல் எறிகணைக்கு மாற்றாக R-37M எறிகணையைப் பொறுத்துவதற்கு ரஷ்யாவானது இந்தியாவிற்கு வாய்ப்பளித்துள்ளது.
- R-37M ஆனது அதன் NATO அறிக்கையிடல் பெயரான AA-13 Axehead என்றும் அழைக்கப் படுகிறது.
- இது ரஷ்யாவால் உருவாக்கப்பட்ட மிக நீண்ட தூர தாக்குதல் வரம்புடைய வான்வழி தாக்குதல் எறிகணையாகும்.
- R-77 ஆனது அதிகபட்சமாக சுமார் 100 கிலோமீட்டர் தூரம் தாக்கும் திறன் கொண்டது என்பதோடு இது 300 முதல் 400 கிலோமீட்டர் என்ற வரையிலான R-37M எறிகணையின் தாக்குதல் வரம்பை விட கணிசமாகக் குறைவாகும்.
- இதன் வேகத்தைப் பொறுத்தவரையில், R-77 சுமார் மேக் 4-5 வேகம் வரை எட்டும் திறன் கொண்ட அதே நேரத்தில் R-37M மேக் 6 வேகத்தில் இயங்கும்.




## பிரம்மோஸ் அடுத்த தலைமுறை நுட்பத்திலான சீர்வேக எறிகணை

- இந்தியாவின் பிரம்மோஸ் NG (அடுத்த தலைமுறை தொழில்நுட்பத்திலான) எறிகணை அமைப்பின் உருவாக்கமானது நிறைவு நிலையை எட்டும் நிலைகளில் உள்ளது.
- பிரம்மோஸ் NG ஆனது அதன் முன்னோடி வடிவினைப் போலவே அதே திறன்களைக் கொண்ட ஒரு மெல்லிய வடிவிலான எறிகணையாகும்.

- பிரம்மோஸ் NG இலகுவானது, சிறியது மற்றும் அடக்கமானது என்பதால் ரஷ்யாவில் உருவாக்கப்பட்ட சுகோய்-30MKI ரக போர் விமானம் மற்றும் இங்கு உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட தேஜாஸ் எனும் இலகுரகப் போர் விமானம் ஆகியவற்றில் பொருத்தப் படுவதற்கு இணக்கமாக இருக்கும்.
- இந்த எறிகணை ஆனது 290 கி.மீ தூரம் மற்றும் 3.5 மேக் வரை வேகம் கொண்டது.
- பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு அடுத்தபடியாக, இந்த எறிகணை அமைப்புகளை வாங்கும் இரண்டாவது நாடாக இந்தோனேசியா மாற உள்ளது.




## ரெய்மெய் கணினி





- ரெய்மெய் எனப்படும் 20 குயூபிட் அளவிலான துளிமக்/குவாண்டம் கணினியானது, ஜப்பானின் ஃபுகாகு மீத்திறன் கணினியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- ஃபுகாகு உலகின் ஆறாவது வேகமான மீத்திறன் கணினியாகும்.
- இது மேம்பட்ட சிக்கல் தீர்க்கும் திறன் கொண்ட குவாண்டம் மற்றும் வழக்கமான கணினி முறைகளை இணைத்து, முழுமையாகச் செயல்படும் முதல் கலப்பின துளிம மீத்திறன் கணினி ஆகும்.

## F11 பாக்டீரியா


- குறைந்தது மூன்று வகையான பெர் மற்றும் பாலிஃப்ளூரோ அல்கைல் பொருட்களை (PFAS) உடைத்து அதனை நன்கு சிதைக்கும் திறன் கொண்ட பாக்டீரியாக்களின் ஒரு வகையை ஆராய்ச்சி குழு கண்டறிந்துள்ளது.

- குறிப்பிடத்தக்க வகையில், இந்தத் திரிபு ஆனது, அதனைச் சிதைக்கும் செயல்பாட்டின் போது உற்பத்தி செய்யப்படும் சில நச்சுத் தன்மை வாய்ந்த தயாரிப்புகளையும் நன்கு சிதைக்கும் தன்மை கொண்டது.
- லேப்ரிஸ் போர்ச்சுகலென்சிஸ் F11 (F11) என்ற இப்பாக்டீரியம் ஆனது 100 நாட்களில் 90 சதவீதத்திற்கும் அதிகமான பெர்ஃப்ளூரோக்டேன் சல்போனிக் அமிலத்தை (PFOS) வளர் சிதை மாற்றத்திற்கு உட்படுத்தியது.
- PFOS என்பது மிகவும் பரவலான மற்றும் நிலையான PFAS சேர்மங்களில் ஒன்றாகும் என்பதோடு இது 2022 ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனத்தினால் ஆபத்தானது என வகைப்படுத்தப்பட்டது.
- F11 பாக்டீரியாக்கள் முதலில் போர்ச்சுகலின் மிக மாசுபட்ட தொழில்துறை பகுதியின் மண்ணிலிருந்து பிரிக்கப்பட்டது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய முதலீட்டுப் போக்குகள் கண்காணிப்பு அறிக்கை 2024





- ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாடு (UNCTAD) 2024 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய முதலீட்டுப் போக்குகள் கண்காணிப்பு அறிக்கையினை

வெளியிட்டுள்ளது.

- ❖ உலகளாவிய அந்நிய நேரடி முதலீட்டு (FDI) வரவுகள் ஆனது 11% அதிகரித்து 2024 ஆம் ஆண்டில் சுமார் 1.4 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டின.
- ❖ இருப்பினும், ஐரோப்பிய வரி ஏய்ப்பு மாற்று பொருளாதாரங்கள் வழியான சில பெரும் முதலீடுகளை நீக்கினால் FDI சுமார் 8% குறைந்துள்ளது.
- ❖ வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் FDI 43% அதிகரித்துள்ளது.
- ❖ 2023 ஆம் ஆண்டில் சுமார் 6% சரிவுப் பதிவானதைத் தொடர்ந்து, நன்கு வளர்ந்து வரும் பொருளாதாரங்களுக்கான FDI 2024 ஆம் ஆண்டில் 2% குறைந்துள்ளன.
- ❖ புதிய வெளிநாட்டு நிறுவனங்களின் முதலீட்டு அறிவிப்புகள் ஆனது எண்ணிக்கையில் 6% குறைந்துள்ளன.
- ❖ ஆப்பிரிக்காவில் FDI 84% அதிகரித்து சுமார் 94 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டி உள்ளது என்ற நிலையில் இது முக்கியமாக எகிப்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு பெரிய திட்டத்தால் உந்தப்பட்டது.
- ❖ வளர்ச்சியடைந்து வரும் ஆசியாவிற்கான அந்நிய நேரடி முதலீடு 7% குறைந்துள்ளது அதே சமயம் சீனாவும் 29% சரிவை எதிர்கொண்டுள்ளது.
- ❖ ஆசியான் அமைப்பின் உறுப்பினர் நாடுகள் சுமார் 2% அதிகரிப்பையும், இந்தியா 13% அதிகரிப்பையும் கண்டுள்ளது.
- ❖ பசுமைத் துறை திட்டங்களில் இந்தியா வளர்ச்சியைக் கண்டுள்ளது.
- ❖ இந்தியாவில் சர்வதேச திட்ட நிதி ஆனது எண்ணிக்கையில் 23% மற்றும் மதிப்பில் 33% குறைந்துள்ளது.
- ❖ 2024 ஆம் ஆண்டில் உள்கட்டமைப்பு, வேளாண் சார் உணவு அமைப்புகள் மற்றும் நீர் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட நிலையான மேம்பாட்டு இலக்குகளுடன் தொடர்புடைய துறைகளில் முதலீடுகள் 11% குறைந்துள்ளன.

# மாநிலச் செய்திகள்

## நீலகை மான்களை கொல்லுதல் - ஹரியானா





- ❖ அந்த மாநில அமைச்சரவையானது மிகச் சமீபத்தில், கிராமப்புறங்களில் அவ்வப்

போது பயிர்களுக்கு அதிக அளவில் சேதம் விளைவிக்கின்ற நீலகை மான் (மரையான்) இனத்தினை கொல்வதற்கு அனுமதி அளித்துள்ளது.

- அவற்றின் எண்ணிக்கை மிக அதிகரித்துள்ள போதிலும் ஹரியானாவின் பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் உணவுச் சங்கிலியின் இன்றியமையாத பகுதியாக நீலகை மான் உள்ளது.
- இந்த நீலகை மான்களின் மிகவும் அதிகரித்த எண்ணிகையானது ஹரியானா மாநில விவசாயிகளின் நீண்ட கால அச்சுறுத்தலாக இருந்து வருகின்றது.
- இதனைக் கட்டுப்படுத்துவதற்கான சில மாற்றுத் தீர்வுகளாக நீலகை மான்களை மற்ற வாழ்விடங்களுக்கு இடமாற்றம் செய்தல் மற்றும் பயிர்களைப் பாதுகாக்க 'சர பந்தி' மற்றும் 'சமுஹிக் டார்பந்தி' போன்ற வேலி நுட்பங்கள் செயல்படுத்தப் படுகிறன.
- 1996 ஆம் ஆண்டு நவம்பர் 07 ஆம் தேதியன்று, நீலகை மான்களை கொல்ல அரசாங்கம் அனுமதி வழங்கியது.
- கடந்த 28 ஆண்டுகளாக அதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டன.
- 1996 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை, ஹரியானா முழுவதும் நீலகை மான்களை கொல்வதற்கு மிகக் குறைவான அனுமதிகளே வழங்கப்பட்டுள்ளன.
- பொதுவாக, மத நம்பிக்கைகள் காரணமாக அங்குள்ள மக்கள் நீலகை மான்களை அழிக்க அனுமதி கோருவதில்லை.
- இதனைச் சட்டப்படி வேட்டையாட பீகார் மாநிலம் இதனை வெர்மின் என்று அறிவித்து உள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## J.C.போஸ் ஆராய்ச்சி நிதியளிப்பு முன்னெடுப்பு




- அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை (ANRF) ஆனது J.C.போஸ் ஆராய்ச்சி நிதி அளிப்பு முன்னெடுப்பினைத் (JBG) தொடங்குவதாக அறிவித்துள்ளது.
- இந்த வெளிப்புற நிதி வாய்ப்புகள் மூலம் மூத்த இந்திய அறிவியலாளர்கள் மற்றும் பொறியாளர்களின் சிறந்த செயல்திறன் மற்றும் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் ஒரு புதிய திட்டம் ஆகும்.

- இது மிகவும் அதிநவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் அவர்களின் ஆராய்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் பங்கேற்பாளர்கள் ஆய்வில் உள்ள மூத்த இந்திய அறிவியலாளர்கள் அல்லது நிரூபிக்கப்பட்ட சிறந்தச் சாதனைப் பதிவைக் கொண்ட ஆராய்ச்சியாளர்கள் ஆக இருக்க வேண்டும்.
- அவர்கள் ஒரு இந்திய நிறுவனம் / பல்கலைக்கழகத்தில் மிகவும் குறைந்தபட்சம் ஒரு பேராசிரியர் நிலை பதவியையோ அல்லது அதற்கு சமமான பதவியையோ வகிக்க வேண்டும்.
- இந்த முன்னெடுப்பானது ஐந்து ஆண்டுகளுக்கு சுமார் 25 லட்சம் ரூபாய் வரையிலான வருடாந்திர ஆராய்ச்சி நிதியை வழங்குகிறது.
- கூடுதலாக இதனைச் செயல்படுத்தும் நிறுவனத்திற்கு சுமார் 1.0 லட்சம் ரூபாயானது வருடாந்திர செலவினத் தொகையாக வழங்கப்படும்.

## கிராமி விருதுகள் 2025

- 11 பரிந்துரைகளுடன், இதன் பரிந்துரைப் பட்டியலில் முன்னணி வகித்த பியோன்சே, ஜே-Z உடனான அவரது முந்தைய ஒரு சக சாதனை நிலையினை முறியடித்து கிராமி விருதுகளின் வரலாற்றில் மிகவும் அதிக பரிந்துரைகளைப் பெற்ற கலைஞராக புதிய சாதனையைப் படைத்துள்ளார்.
- இந்த வகையில் மாபெரும் தாக்கத்தினை உருவாக்கிய அவரது இசைத் தொகுப்பான கவ்பாய் கார்ட்டர், சிறந்த நாட்டுப்புற இசைத் தொகுப்பு விருதினை வென்றது.
- இதில் 94 பிரிவுகளில் வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுகிறார்கள்.
- இருப்பினும், கென்ட்ரிக் லாமரின் Not Like Us எனும் பிரபல பாடல் ஆண்டின் சாதனைப் பதித்தப் பாடல், ஆண்டின் சிறந்தப் பாடல், சிறந்த ராப் நிகழ்ச்சி, சிறந்த ராப் பாடல் மற்றும் சிறந்த இசை ஒளிப்படக் காட்சி விருதினை வென்றது.
- இதற்கிடையில், சார்லி XCX மற்றும் போஸ்ட் மலோன் ஆகியோர் தலா எட்டு விருது பரிந்துரைகளைப் பெற்றனர் என்பதோடு மேலும் பில்லி எலிஷ் ஏழு பரிந்துரைகளைப் பெற்றார்.




## முகமது ரஃபி அவர்களின் நினைவு நாணயம்

- மிகப் புகழ்பெற்ற பின்னணிப் பாடகர் மறைந்த முகமது ரஃபி அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, 100 ரூபாய் மதிப்பிலான நினைவு நாணயத்தினை வெளியிட அரசு முடிவு செய்துள்ளது.

- "முகமது ரஃபி கி ஜனம் சதாப்தி" என்ற ஒரு வெட்டெழுத்து ஆனது நாணயத்தின் மேல் விளிம்பில் தேவநாகரி எழுத்து வடிவில் எழுதப் பட்டிருக்கும்.
- தனது 40 ஆண்டுகாலத் தொழில் முறை வாழ்க்கையில் சுமார் 25,000க்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களைப் பாடியுள்ள ஒரு பழம்பெரும் இந்தியப் பின்னணிப் பாடகர் ஆவார்.
- இவர் தனது பன்முகத் திறன் மற்றும் குரல் பாணிக்குப் பெயர் பெற்றவர் ஆவார்.




# விளையாட்டு செய்திகள்

## 9வது ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் 2025

FINAL MEDAL TALLY


| Rank | Name of the NOC | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | People's Republic of China | 32 | 27 | 26 | 85 |
| 2 | Republic of Korea | 16 | 15 | 14 | 45 |
| 3 | Japan | 10 | 12 | 15 | 37 |
| 4 | Kazakhstan | 4 | 9 | 7 | 20 |
| 5 | Philippines | 1 | 0 | 0 | 1 |
| 5 | Uzbekistan | 1 | 0 | 0 | 1 |
| 7 | DPR Korea | 0 | 1 | 0 | 1 |
| 8 | Chinese Taipei | 0 | 0 | 1 | 1 |
| 8 | Thailand | 0 | 0 | 1 | 1 |

- 9வது ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் சீனாவின் ஹார்பின் எனுமிடத்தில் நடைபெற்றன.

- இப்போட்டிகளுக்கான அதிகாரப்பூர்வச் சின்னங்கள் ஆனது, "பின்பின்" மற்றும் "நினி" (புலிகள்), மற்றும் அந்தப் போட்டிக்கான ஒரு முழக்கமாக "Dream of Winter, Love among Asia" வெளியிடப்பட்டது.
- சீனா 85 பதக்கங்களுடன் (32 தங்கம், 27 வெள்ளி, 26 வெண்கலம்) பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.
- தென்கொரியக் குடியரசு 45 பதக்கங்களுடன் (16 தங்கம், 15 வெள்ளி, 14 வெண்கலம்) இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- ஜப்பான் 37 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- கஜகஸ்தான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவை இதன் முதல் ஐந்து இடங்களில் இடம் பெற்றன.
- இந்தியா 59 விளையாட்டு வீரர்களைக் கொண்ட மிகப்பெரியக் குழுவை அனுப்பியது, ஆனால் எந்த பதக்கங்களையும் வெல்லவில்லை.

# இதரச் செய்திகள்

## தோல் தடிப்பு நோய் தடுப்பூசி – பயோலம்பிவாக்சின்





- பாரத் பயோடெக் குழுமத்தின் நிறுவனமான பயோவெட் என்ற நிறுவனம், பயோலம்பி வாக்சின் தோல் தடிப்பு நோயானது (LSD) தடுப்பூசிக்கான மத்திய மருந்து தரநிலைகள் கட்டுப்பாட்டு அமைப்பின் (CDSCO) உரிமத்தைப் பெற்றுள்ளது.
- இது இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையுடன் (ICAR) இணைந்து உருவாக்கப்பட்டது.
- இது கறவை மாடுகள் மற்றும் எருமைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.
- இது LSD நோய்க்குத் தடுப்பூசி போடப்பட்ட விலங்குகளிலிருந்து (DIVA) பாதிக்கப்பட்ட விலங்குகளைப் பிரிப்பதற்கான முதல் உலகளாவிய குறிகாட்டி தடுப்பூசியாகும்.
- இந்த தோல் தடிப்பு நோய் (LSD) ஆனது முதன்முதலில் இந்தியாவில் 2019 ஆம் ஆண்டில் ஜூலை மாதத்தில் ஒடிசா மாநிலத்தில் கண்டறியப்பட்டு பின்னர் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 20 மாநிலங்களுக்குப் பரவியது.
- இந்த நோயானது கால்நடைகள் மற்றும் ஆசிய நீர் எருமைகளைப் பாதிக்கிறது.
- பூச்சிகளால் பரவுகின்ற இந்த நோயானது, பால் உற்பத்தியில் மிகவும் குறிப்பிடத்தக்க

குறைவினை ஏற்படுத்துகிறது.

- இந்தியா உலகின் மிகப்பெரிய ஒரு பால் உற்பத்தியாளராக உள்ளது என்பதோடு இது உலகளாவிய பால் உற்பத்தியில் சுமார் 22 சதவீதத்திற்கும் அதிகமானப் பங்கினை அளிக்கிறது என்ற நிலையில் இந்தியாவினைத் தொடர்ந்து 28 ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் அமெரிக்கா ஆகியவை உள்ளன.

## ரத்னகிரி பௌத்த அகழ்வாராய்ச்சிகள்

- இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையம் (ASI) ஆனது, ஒடிசாவின் ஜாஜ்பூர் மாவட்டத்தில் உள்ள ரத்னகிரி தளத்தில் மேற்கொள்ளப்படும் புதிய அகழ்வாராய்ச்சியின் போது முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த/புத்த மத எச்சங்களைக் கண்டெடுத்துள்ளது.
- அவர்கள் மிகவும் சமீபத்தில் மூன்று பிரம்மாண்டமான புத்தர் தலைகள், ஒரு பெரிய உள்ளங்கை, ஒரு பழங்கால சுவர் மற்றும் சில கல்வெட்டுகளைக் கண்டெடுத்துள்ளனர்.
- ASI ஆனது, ரத்னகிரி பௌத்த பாரம்பரியத் தளமானது முதன்முதலில் அகழ்வாராய்ச்சி செய்யப் பட்டு சுமார் 60 ஆண்டுகளுக்கும் மேலான நிலையில், தற்போது அங்கு புதிய ஆய்வுகளை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.
- "ரத்தின மலை" எனப் பொருள்படும் ரத்னகிரி ஆனது பிராமணி மற்றும் அதன் துணை நதியான பிருபா ஆகிய இரண்டு நதிகளுக்கு இடையே அமைந்துள்ளது.
- உதயகிரி மற்றும் லலித்கிரி ஆகியவற்றுடன் கூடிய ஒடிசாவின் புகழ்பெற்ற ஒரு வைர முக்கோணப் பகுதியின் மூன்று முனைகளில் இதுவும் ஒன்றாகும்.
- நரசிம்மகுப்த பாலாதித்யா (கி.பி. 495-530) என்பவரின் ஆட்சியின் போது, இந்த வைர முக்கோணப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மிகவும் ஒரு ஆரம்பகால வரலாற்றுக் கட்டமைப்புகள் கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.
- ரத்னகிரி மடம்தான் இந்தியாவில் வளை கோட்டுக் கூரையுடன் கூடிய ஒரே பௌத்த மடாலயம் ஆகும்.
- 1958 மற்றும் 1961 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட முதல் அகழ்வாராய்ச்சிகள் ஆனது பின்னாளில் இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையத்தின் முதல் பெண் தலைமை இயக்குநராக (1981-83) பணியாற்றிய டெபாலா மித்ராவால் மேற்கொள்ளப்பட்டன.





## சீனாவில் ஜுராசிக் கால புதைபடிவம் கண்டுபிடிப்பு

- சுமார் 150 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய பழமையானதாகக் கருதப்படும் குட்டை வால் பறவையின் புதைபடிவம் ஆனது கிழக்கு சீனாவில் கண்டெடுக்கப் பட்டு

உள்ளது.

- இந்தப் பறவையின் குறுகிய வாலானது பைகோஸ்டைல் எனப்படும் கூட்டு எலும்பில் முடிவடைகிறது என்பது நவீன பறவைகளில் காணப்படும் ஒரு தனித்துவமான அம்சம் ஆகும்.
- இது நவீனப் பறவைகளின் உடல் அமைப்பானது, முன்னர் கருதப் பட்டதை விட சுமார் 20 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையதாக ஜுராசிக் காலத்தின் ஒரு பிற்பகுதியில் தோன்றியது என்பதைக் குறிக்கிறது.
- இது பறவைகள் முன்பு கணிக்கப்பட்டதை விட முன்னதாகவே தோன்றியிருக்கலாம் என்பதை அறிவுறுத்துகிறது.
- ஆரம்ப காலப் பறவைகளின் தோற்றம் ஆனது, இன்னும் முன்னதாகவே, சாத்தியமாக 172 மில்லியன் முதல் 164 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னதாக இருந்திருக்கலாம்.





## ஸ்டார்ஷிப் விண்கலத்தின் வெப்பத் தடுப்பு ஓடு

- இந்தியப் பிரதமருடனான எலோன் மஸ்க்கின் சந்திப்பின் போது, விண்வெளிக்கு என அனுப்பப் பட்ட பெஹிமோத் ஸ்டார்ஷிப் விண்கலத்தில் இருந்த ஒரு வெப்பத் தடுப்பு ஓடு ஒன்றை மஸ்க் பரிசளித்தார்.
- ஸ்டார்ஷிப் விண்கலத்தின் வெப்பத் தடுப்பு ஓடு என்பது வளிமண்டலத்தில் விண்கலம் மீண்டும் நுழையும் போது SpaceX நிறுவனத்தின் ஸ்டார்ஷிப் விண்கலத்தினை நன்கு பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள அறுங்கோண பீங்கான் ஓடுகள் ஆகும்.
- விண்வெளிப் பயண விண்கலத்தின் ஓடுகளைப் போலவே சிலிகா அடிப்படையிலான பீங்கான்களால் இவை ஆனவை ஆனால் இவை அதிக வலிமையானவை மற்றும் அதிக வெப்பத் தடுப்புத் திறன் கொண்டவை ஆகும்.
- விண்கலத்தின் சதுர வடிவ ஓடுகளைப் போலன்றி, அறுகோண வடிவமைப்பு ஆனது நேர்கோடு கட்டமைப்புகளில் உள்ள சில இடைவெளிகளை நீக்குகிறது என்பதால் இது வெப்பம் ஊடுருவுவதற்கான வாய்ப்புள்ள இடங்களைக் குறைக்கிறது.

- இந்த ஓடுகள் ஆனது வெப்பத்தைத் திறம்பட வெளியேற்றி, விண்கலக் கட்டமைப்பைக் குளிர்ச்சியாக வைத்திருக்கும்.




## ஃபுலானி சமூகம் - 'பசுமை சஹாரா' காலம்




- ஆப்பிரிக்காவின் மிகப்பெரியதொரு இடையர்/ஆயர் பிரிவினரில் ஒன்றான ஃபுலானி, 'பசுமை சஹாரா' காலத்தினைச் சேர்ந்ததற்கான (தற்போதைய காலக் கட்டத்திற்கு 12,000 - 5,000 ஆண்டுகளுக்கு முன்பு) ஒரு வரலாற்றைக் கொண்டுள்ளது.
- சுமார் 40 மில்லியன் என்ற எண்ணிக்கையினைக் கொண்ட ஃபுலானி மக்கள், மேற்கு ஆப்பிரிக்காவின் அட்லாண்டிக் கடற்கரையிலிருந்து மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள சாட் ஏரி வரையிலான பகுதிகளில் காணப்படுகின்றனர்.
- அவர்கள் பிரதானமாக நைஜீரியா, மாலி, கினியா, செனேகல் மற்றும் நைஜர் ஆகிய

நாடுகளில் அதிகமாக உள்ளனர், ஆனால் பல நாடுகளிலும் காணப்படுகின்றனர்.

- இவர்கள் ஃபுலானிகள் மகியாயா (மேய்ப்பர்கள்), ஃபுலானின் சோரோ (நகரங்களில் வசிப்பவர்கள்) மற்றும் காடுகளில் வாழும் ஃபுலானியைக் குறிக்கின்ற பரரோ என மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.
- அவர்கள் மிகவும் பெரும்பாலும் நாடோடி வாழ்க்கை முறையைப் பின்பற்றுகின்றனர் என்பதோடு அவர்கள் கண்டுபிடிக்கக் கூடியதொரு தொல்லியல் சான்றுகளை விட்டுச் செல்லாத வகையிலான சில தற்காலிக முகாம்கள் அல்லது நடமாடும் கூடாரங்களைப் பயன்படுத்துகின்றனர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★